# பள்ளிகளைத் தத்தெடுத்தல்

# (SCHOOL ADOPTION)

## வழிகாட்டுநூல்

**முனைவர் மு.செல்வம்**

**முதல்வர்**

**DIET**

**நாமக்கல்**

**மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்**

**நாமக்கல்**

## அக்டோபர் 2024

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | அறிமுகம் | 3 |
| 2 | பள்ளித் தத்தெடுத்தலின் நோக்கம் | 3 |
| 3 | கருத்துத்தொகுதி | 3 |
| 4 | பொதுவான செயல்திட்டங்கள் | 4 |
| 5 | சமூகத்தைப் பயன்படுத்துதல் | 5 |
| 6 | தேவைகளை அறிதல் | 5 |
| 7 | கூட்டாகத் திட்டமிடல் | 5 |
| 8 | தொலைநோக்கு | 6 |
| 9 | குறிக்கோள் பணித்திட்டம் | 6 |
| 10 | வலுவான கூட்டுப் பங்காண்மை | 7 |
| 11 | பள்ளி முன்னேற்றம் | 8 |
| 12 | மதிப்பீடு | 8 |
| 13 | தொடர் தகவல் தொடர் | 9 |
| 14 | பாராட்டும் அங்கீகாரமும் | 9 |
| 15 | வகுப்பறைக் கற்பித்தல் பார்வை | 9 |
| 16 | பள்ளித் தத்தெடுப்பின் விளைவுகள் | 10 |
| 17 | அறிக்கை தயாரித்தல் | 10 |
| 18 | இறுதியாக... | 10 |

# பள்ளிகளைத் தத்தெடுத்தல்

## அறிமுகம்

தத்தெடுத்தல் என்பதற்கு தனதாக்கிக் கொள்ளுதல் என்ற அர்த்தம் உள்ளது. பிள்ளைகளைத் தத்தெடுத்து தன் பிள்ளைகளாக்கி வளர்ப்பதைப்போல, பள்ளிகளையும் தத்தெடுக்கலாம். பள்ளிகளின் முன்னேற்றத்திலும், மேம்பாட்டிலும் நம்மால் முடிந்த உதவிகளைச் செய்யலாம்.

பள்ளிகளைத் தத்தெடுத்து அவற்றின் பயன்களைப் பெரிதாக்க கீழ்க்காணும் வழிமுறைகளையும், உத்திகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

தத்தெடுப்பவர் (adopter) என்பவர் ஒரு குழந்தையையோ, ஒரு பள்ளியையோ, ஒரு நிறுவனத்தையோ, ஒரு யோசனையையோ அதை வளர்க்கவோ, முன்னேற்றவோ செய்பவர் ஆவார்.

தத்தெடுக்கப்பட்ட குழந்தையை ‘தத்துப்பிள்ளை’ (adoptee) என்பதைப்போல தத்தெடுக்கப்பட்ட பள்ளியை ‘தத்துப்பள்ளி’ அல்லது ‘தத்தெடுத்தப் பள்ளி’ என அழைக்கலாம்.

தத்தெடுக்கப்பட்ட குழந்தையைத் தத்தெடுத்தவர் தனதாக்கிக்கொண்டு வளர்ப்பதைப்போல, தத்துப்பள்ளியின் சகலவிதமான வளர்ச்சியில் தலைமையாசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், சமூகத்தினர், தொழில் நிறுவனங்கள், அரசு சாரா அமைப்புகள் மற்றும் தொண்டு நிறுவனங்களும் பள்ளி முன்னேற்றத்தில் அக்கறைச் செலுத்தச் செய்யலாம்.

## பள்ளித் தத்தெடுத்தலின் நோக்கம்

பள்ளிகளைத் தத்தெடுத்து அப்பள்ளிகளை வளப்படுத்துதல், ஆசிரியர்களின் பணித்திறனை மேம்படுத்துதல், பள்ளி வளாகத்தூய்மை, மற்றும் வகுப்பறைக் கற்பித்தலை உற்றுநோக்குதல் போன்றவைகள் பள்ளித் தத்தெடுத்தல் திட்டத்தின் முதன்மை நோக்கங்களாகும்.

## கருத்துத்தொகுதி

பள்ளிக்கூடம் என்பது கட்டடம், வகுப்பறை, ஆய்வகம், குடிநீர் வசதி, கழிப்பறை, கற்றல் –கற்பித்தல் உபகரணங்கள், விளையாட்டு மைதானம், தலைமையாசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலகப் பணியாளர்கள் மற்றும் இதரப் பணியாளர்களைக் கொண்ட கூட்டமைப்பு ஆகும்.

பள்ளிக்கூடத்தில் உயிரற்றப் பொருட்களும், உயிருள்ளப் பொருட்களும் அங்கங்களாகக் கருதப்படுகின்றன. இவையனைத்தும் மாணவர்களின் கல்வி, உடல், உள்ளம், திறமைகளை மேம்படுத்தி முழு வளர்ச்சி அடைந்த மனிதர்களாக மாற்றுவதற்கு உதவுகின்றன.

பள்ளியில் உள்ள உயிரற்ற அங்கங்களின் குறைபாடுகளை நீக்குதல், அவற்றில் வசதி வாய்ப்புகளை ஏற்படுத்துதல், தொழில் நுட்பங்களைப் புகுத்துதல் போன்றவற்றை மேற்கொள்ளும் போது அவற்றை மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்குப் பயன்படுத்த ஏதுவாக இருக்கும்.

ஆசிரியர்களின் கற்பித்தல் திறன்களை மேம்படுத்துதல், கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள், புதுமைகளைப் புகுத்துதல், தொழினுட்பங்களைக் கையாளுதல் போன்றவைகள் மாணவர்களின் கற்றலுக்கு பெரிதும் துணைபுரியும்.

தலைமையாசிரியரின் நிருவாகத் திறன்கள் தற்போதைய மேலாண்மைத் திறன்களோடு இணையும் போது ஒட்டுமொத்த பள்ளியின் வளர்ச்சி அதிகரிக்கும். உயிரற்ற அங்கங்களை முழுவதுமாகப் பயன்படுத்தி பள்ளி வளர்ச்சிப் பெற ஏதுவாக வசதி வாய்ப்புகளை மேம்படுத்த விருப்பமுள்ளவர்களைத் தத்தெடுக்கச் செய்யலாம். ஆசிரியர் திறன்களை மேம்படுத்த தொழினுட்பங்கள் சார்ந்தப் பயிற்சிகளை அளிக்கலாம். பயிற்சிகளை அளிப்பதற்கு பயிற்சியாளர்களைப் பயன்படுத்தலாம். பயிற்சியாளர்களும் பள்ளியில் பயிற்சிக்கொடுக்க ஏதுவாக ஆசிரியர்களைத் தத்தெடுக்கலாம்

சமூக அங்கத்தினர், தொண்டு நிறுவனங்கள், கொடையாளிகள் (philanthropist), வணிக நிறுவனங்கள், ஆசிரியர்கள் போன்றோர்கள் வறுமையில் உள்ள மாணவர்கள், பெற்றோர்களை இழந்த மாணவர்கள் போன்றவர்களைத் தத்தெடுத்து கல்வி வளர்ச்சியில் உதவலாம். பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களும் பள்ளியில் உள்ள ஏதேனும் ஓர் அங்கத்தைத் தத்தெடுக்கலாம்.

மேலே பகிரப்பட்ட விசயங்களே பள்ளித் தத்தெடுத்தலுக்கான ‘முழுமையான கருத்துத்தொகுதி (ideology) ஆகும்.

## பொதுவான செயல்திட்டங்கள்

பள்ளித் தத்தெடுத்தலில் பொதுவாக கீழ்க்காணும் செயல்திட்டங்களைச் (Program) செய்யலாம்.

- **உள்கட்டமைப்பு வசதிகளைச் செய்தல்**

வகுப்பறைகள், நூலகங்கள், ஆய்வகங்களுக்குத் தேவையான வசதிகள், புதுப்பித்தல், பழுது நீக்குதல் போன்றவற்றைச் செய்யலாம். குடிநீர் வசதி, சுத்தம் மற்றும் சுகாதார வசதி போன்றவற்றையும் செய்யலாம். வகுப்பறைகளுக்குத் தேவையான இருக்கை வசதி, எழுதும் வசதி (bench, desks, and chairs) தேவைப்படும் கற்றல்-கற்பித்தல் உபகரணங்களை வழங்கலாம்.

- **கல்வி சார் ஆதரவு பெறுதல்**

குறைதீர்க் கற்பித்தல், கூடுதல் கற்பித்தல் ஆதரவு, ஆலோசனை, அறிவுரைகள், புத்தகங்கள், எழுதுப்பொருட்கள் போன்றவற்றை மாணவர்களுக்கு வழங்கலாம். தொழில் மேம்பாட்டிற்கானப் பயிற்சிகளை ஆசிரியர்களுக்கு வழங்கலாம்.

## சமூகத்தைப் பயன்படுத்துதல்

பெற்றோர் – ஆசிரியர் பணிமனை, பெற்றோர் – குழந்தை சந்திப்பு, உள்ளூர் அமைப்புகளிடம் ஆதரவு/உதவிப் பெறுதல், சமூகத்தினரிடம் கல்வியின் முக்கியத்துவத்திற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துல் போன்றவற்றைத் திட்டமிடலாம்.

## தேவைகளை அறிதல்

பள்ளிக்கட்டடங்கள், கலைத்திட்ட நடவடிக்கைகளான கற்பித்தல், கற்பித்தல், அணுகுமுறைகள் மற்றும் முறைகள், கற்றல், வகுப்பறை மேலாண்மை, தேர்வு, ஆசிரியர் பயிற்சி, பள்ளி நிருவாகம், வள மேலாண்மை போன்றவற்றில் எதில் மாற்றம், முன்னேற்றம் தேவையோ அவற்றைத் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களோடு பள்ளியைத் தத்தெடுப்பவர் கலந்துரையாடி அறிய வேண்டும்.

எந்தெந்தப் பகுதியில் விளைவுகளையும், தாக்கங்களையும் அதிகரிக்க வேண்டுமோ அவற்றை மிக நுட்பமாகக் குறிப்பிட (pin point) வேண்டும்.

எந்தப் பகுதியில் உடனடியாக விளைவுகளைப் (result) பெறவேண்டுமோ, அப்பகுதிகளுக்கு முன்னுரிமையையும், முக்கியத்துவத்தையும் கொடுக்க வேண்டும். தேவைகளைப் பொருத்தவரை, ஒவ்வொருத் தேவையும் பள்ளிக்குப் பள்ளி மாறுபடும்.

## கூட்டாகத் திட்டமிடல்

தலைமையாசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள், சமூகம் மற்றும் பெற்றோர்களைக் கொண்டு கலந்துரையாடி, பள்ளியின் தொலைநோக்கையும் (vision), இலக்குகளையும் (goals) மற்றும் தொலைநோக்கை அடைவதற்கு சாத்தியமானச் குறிக்கோள் பணித்திட்டத்தையும் (mission) விவாதிக்கவேண்டும். பின்னர் பள்ளி நலன் சார்ந்த விளைவுகளைப் பெற என்னென்ன செயல்பாடுகள் மேற்கொள்ள வேண்டும் என தீர்க்கமான முடிவுகள் எடுக்க வேண்டும்.

**இனி, தொலைநோக்கிற்கும் குறிக்கோள் பணித்திட்டத்திற்கும் உள்ள வேறுபாடுகளை இப்போது தெரிந்து கொள்ளலாம்.**

| **தொலைநோக்கு** | **குறிக்கோள் பணித்திட்டம்** |
|---|---|
| • எதிர்காலத்தில் நம் பள்ளி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான திசையைத் தெரிவிக்கக்கூடியது. | • நிகழ்காலத்தில் தொலைநோக்கை அடைய திட்டமிட்டு, ஒவ்வொரு நடவடிக்கையாக மேற்கொண்டு இலக்கை அடைய உதவக் கூடியது. |

| | |
|---|---|
| • பள்ளியானது இலக்கை நோக்கி பயணிக்கும் திசையைக் குறிப்பிடுவதால் பணியாளர்கள் ஆர்வத்துடன் செயல்படுவர். | • முக்கிய மதிப்புகளைத் தெரிவித்து, தேவையானதற்கு முன்னுரிமைக் கொடுத்து, அன்றாடச் செயல்பாடுகளுக்கு வழிகாட்டுவதாகும். |
| • நல்ல விசயங்களை நம் பள்ளி பெறப்போகிறது என பணியாளர்கள் நம்புவதால், தொலைநோக்கில் அவர்களுக்குப் பேரார்வம் பிறக்கிறது. | • தொலைநோக்கை அடைய உதவும் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதால் கனவு நனவாகும் சாத்தியம் பிறக்கிறது. |
| • எதிர்காலத்தைக் குறிப்பிடக் கூடிய ஒன்றாகும். | • நிகழ்காலத்தைக் குறிப்பிடக்கூடிய ஒன்றாகும். |
| • பரந்து விரிந்த (broder) ஒன்றாகவும், பணியாளர்களுக்கு ஊக்கமளிக்கும் ஒன்றாகவும் இருக்கிறது. | • குறிப்பிட்ட ஒன்றை அடைவதற்காக குறிவைத்து இயங்கும் ஒன்றாகக் கருதப்படுகிறது. |
| • உதாரணம்:<br>• ''மிக நல்ல மாணவர்களை உருவாக்குவதில் நெம்பர் 1 பள்ளியாக இருக்கும்'' | • உதாரணம்:<br>• '' மிக நல்ல மாணவர்களை உருவாக்க புதிய உத்திகளை நடைமுறைப்படுத்துதல்'' |

## தொலைநோக்கு (vision)

எதிர்காலத்தில் பள்ளி எப்படி இருக்க வேண்டும் என்ற ஒரு பெரிய கனவைத்தான் 'தொலைநோக்கு' என்கிறோம். கனவை நோக்கியப் பயணத்தை மேற்கொள்ள தலைமை ஆசிரியர் , ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை இது உற்சாகப்படுத்துகிறது. இது பள்ளிக்கு ஒரு தனித்த அடையாளத்தைக் கொடுக்கிறது.

## குறிக்கோள் பணித்திட்டம் (mission) :

பள்ளியானது தொகைநோக்கை அடைவதற்கு தற்போது என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என குறிக்கோள் பணித்திட்டம் வலியுறுத்துகிறது. இது முடிவுகளை எடுப்பதற்கும், செயல்பாடுகளை மேற்கெள்ளவும் வழிகாட்டும்.

உதாரணமாக மிக நல்ல மாணவர்களை உருவாக்கும் நெம்பர் 1 பள்ளியாக எதிர்காலத்தில் இருக்கும் என்ற தொலைநோக்கிற்கு கீழ்க்காணும் செயல்பாடுகளைச் செய்ய பணித்திட்டமானது நம்மைத் தூண்டக் கூடியதாக இருக்கும்.

- பள்ளித் தூய்மையாக இருக்க பள்ளியில் உள்ள அனைவரும் துணைபுரிதல்.
- கட்டடம், வகுப்பறை, விளையாட்டு மைதானம், கழிவறை போன்றவற்றிற்குத் தேவைப்படும் பராமரிப்பு, மற்றும் அழகாக்குதல் போன்றவற்றை செய்தல்.
- கல்வி மற்றும் விழிப்புணர்வை (உடல்நலன், சுத்தம், சுகாதாரம், சுற்றுச்சூழல், எண்மக்கல்வி) ஏற்படுத்துதல்.

- கலாச்சார விழாக்கள், கலை, இசை, கைவினைப் பொருட்கள் தயாரித்தல், உடல்நலச் சோதனை, விளையாட்டுப் போட்டிகள், மாணவர்களின் திறன்களை வெளிப்படுத்துதல், குழுவேலை போன்றவற்றில் நிகழ்ச்சிகளை நடத்துதல்.
- மாணவர்களுக்குத் தேவையான கருத்துக்களில் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் வழங்குதல்.
- புத்தகங்கள், கணினிகள், அறிவியல் ஆய்வகப் பொருட்களை நன்கொடையாகப் பெறுதல்.
- பெற்றோர் மற்றும் சமூகத்தின் திறன்களைப் பயன்படுத்துதல்.
- மாணவர் பயனுற பாடம் சார்ந்த, பாடம் சாராத செயல்பாடுகளைத் திட்டமிடுதல்.
- பள்ளி வளங்களை முறையாகப் பயன்படுத்துதல்.

## வலுவானக் கூட்டுப் பங்காண்மை

பள்ளியின் இலக்குகள், சவால்கள், முன்னேற்றம் குறித்து திறந்த மனதுடன் தலைமையாசிரியருடன் தகவல் தொடர்பை ஏற்படுத்த வேண்டும். நம்பிக்கை மற்றும் பரஸ்பர மரியாதையைப் பள்ளித் தலைமையாசிரியரும், பள்ளியைத் தத்தெடுத்தவரும் பகிர்ந்து கொள்ளுதல் அவசியாமாகும்.

இருவரும் பள்ளியின் முன்னேற்றத்திற்கான வேலைகளைத் திட்டமிட்டு செய்ய வேண்டும். தலைமையாசிரியர் பள்ளித் தத்தெடுப்புத் திட்டத்தின் தலைவராகவும் (champion) ஆசிரியர்கள் பள்ளித் தத்தெடுப்புத் திட்டத்தின் சொந்தக்காரர்களாகவும் (ownership) இருக்கும் பட்சத்தில் விரும்பும் விளைவுகள் பள்ளியில் அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

## பள்ளி முன்னேற்றம்

கற்பித்தல் அணுகுமுறைகளை மேம்படுத்த வகுப்பறை உற்றுநோக்கலை மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர், விரிவுரையாளர்கள் மற்றும் முதுநிலை விரிவுரையாளர்கள் மேற்கொண்டு, ஆசிரியர்களின் கற்பித்தல் மேம்பாட்டிற்கு உதவலாம்.

- ஆசிரியர்களின் அறிவு, திறமைகளை மேம்படுத்தும் வண்ணம் பள்ளி அளவிலான ஆசிரியர்ப் பயிற்சிகள், கலந்துரையாடல்கள் மற்றும் பணிமனைகள் போன்றவற்றை நடத்தலாம்.
- புதுமையான கற்றல் – கற்பித்தல் கருவிகளை உருவாக்கலாம்.
- கல்வி சார்ந்த ஆராய்ச்சிகளின் முடிவுகளைஆசிரியர்களிடேயே பகிரலாம்.
- குறைத்தீர்க் கற்பித்தல், வழிகாட்டுதல், தகவல் தொடர்பு சார் நுட்பங்களை கற்றல் – கற்பித்தலில் மேற்கொள்ள உதவலாம்.

- மாணவர் நலன் மற்றும் முன்னேற்றம் சார்ந்த கருத்தாக்கங்களில் வழிகாட்டலாம்.
- நூலகப் பயன்பாடு புத்தக வாசிப்பு, பாரம்பரிய விளையாட்டுக்கள் போன்றவற்றில் செயல்பாடுகளை உருவாக்கலாம்.
- ஊரில் உள்ள விருப்பார்வலர்களைக் (volunteers) கொண்டு அவர்களது அறிவு, திறமை போன்றவற்றை மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தலாம்.
- ஆசிரியர்கள் புதிய முன்னெடுப்புகளை மேற்கொள்ளவும், பள்ளியில் கற்றல் – கற்பித்தலில் ஆராய்ச்சிகள் செய்யவும் அவர்களுக்குத் தன்னாட்சி (autonomy) அதிகாரத்தைக் கொடுக்கலாம்.
- அரசு சாரா அமைப்புகள் (NGOs) மற்றும் வியாபார நிறுவனங்கள் போன்றவற்றின் ஆற்றல் ஆதாயங்களைப் (leverage) பெறலாம்.
- ஓய்வு பெற்றவர்கள், படித்தவர்கள் போன்றோரின் நேரத்தையும், திறமையையும் பள்ளி மேம்பாட்டிற்காகப் பயன்படுத்தலாம்.
- சமூக ஊடகங்கள் மூலம் பள்ளி மேம்பாட்டுச் செயல்பாடுகளுக்கு விருப்பார்வலர்களைச் சேர்த்தல் மற்றும் பள்ளி வளர்ச்சிக்கு நன்கொடைகளையும் பெறலாம்.

## மதிப்பீடு

பள்ளித் தத்தெடுப்புத் திட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் செயல்பாடுகளின் பயன்பாடுகளைத் தொடர் மதிப்பீடு செய்ய வேண்டும். தரவுகளைப் பகுத்தாய்வு செய்து செயல்பாடுகளில் குறைகள் இருப்பின் அவற்றைக் களைய முயற்சிகளை எடுக்க வேண்டும். குறைகளைக் களைந்து முன்னேற்றத்தைக் கொடுக்கும் செயல்பாடுகளை அதிகரிக்கச் செய்வதே தொடர் மதிப்பீட்டின் நோக்கமாகும்.

பள்ளித் தத்தெடுத்தலின்போது பள்ளி வளர்ச்சி, தலைமையாசிரியரின் தலைமைத்துவம், ஆசிரியர்களின் திறன்மேம்பாடு, மாணவர்களின் கற்றல், உடல், உள நலன் மற்றும் முன்னேற்றம் சார்ந்த செயல்பாடுகளின் விளைவுகளை அறிய தலைமையாசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடமிருந்து பின்னூட்டங்களைப் பெற்று ஆவணப்படுத்த வேண்டும்.

## தொடர் தகவல் தொடர்பு

பள்ளிக்கும், தத்தெடுத்தவருக்கும் இடையில் கூட்டங்கள், மின்னஞ்சல், சமூக ஊடகங்கள் பின்னூட்டங்கள் மற்றும் இணைய வழி மூலமாக பள்ளி மேம்பாடு குறித்த தகவல் பரிமாற்றம் தொடர்ந்து நிகழ வேண்டும். தொடர் தகவல் தொடர்பானது பள்ளித் தத்தெடுத்தலின் இலக்குகளை நோக்கி பள்ளிச் செயல்பாடுகள் செல்வதற்கு வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை.

பள்ளித் தத்தெடுப்புத் திட்டம் வெற்றிப்பெற இலகுவான செய்திப்பரிமாற்றம் ஒரு முக்கியக் காரணியாக விளங்குகிறது. செய்திப்பரிமாற்றம் எளிதாக நடைபெற கீழ்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

- தொடர்ச்சியாகக் கூட்டங்களை நடத்தலாம்.
- மின்னஞ்சல், அலைப்பேசி அழைப்புகள், குறுஞ்செய்தி அனுப்புதல் போன்ற முறைகளைப் பின்பற்றலாம்.
- வினாக்கள், சந்தேகங்கள் போன்றவற்றைக் காது கொடுத்துக் கேட்கலாம்.
- பின்னூட்டங்களை வழங்க ஏற்பாடு செய்யலாம்.

## பாராட்டும் அங்கீகாரமும்

பாராட்டிற்கு ஏங்காத மனித மனம் உண்டோ !

பள்ளித் தத்தெடுத்தல் திட்டத்தில் ஒவ்வொரு செயல்பாடும் விளைவையும், தாக்கத்தையும் உருவாக்கும்போது, அச்செயல்பாடுகளை வடிவமைத்து செயல்படுத்திய, ஒருங்கிணைத்த ஆசிரியர்களை அங்கீகரிக்க வேண்டும். நன்றி நவிலல் சான்றிதழ், பாராட்டுக் கூட்டம் மற்றும் விருது வழங்குதல் போன்றவற்றின் வாயிலாக ஆசிரியர்களை அங்கீகரிக்கலாம்.

## வகுப்பறைக் கற்பித்தல் பார்வை

மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர், முதுநிலை விரிவுரையாளர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் பள்ளி வகுப்பறைக் கற்பித்தலைப் பார்வையிடும்போது, ஆசிரியர் மாணவர்களிடையிலான அணுகுமுறை, கற்பித்தல் கருவிகளைப் பயன்படுத்துதல், பாடப்பொருளைத் துணைக் கருவிகளின் உதவியுடன் விளக்குதல், மாணவர் செயல்பாடுகள், ஆசிரியர் மாணவர்களிடம் வினாக் கேட்டு விடையறிதல் போன்ற வகுப்பறைச் செயல்பாடுகளை உற்று நோக்க வேண்டும். மேற்கண்டவற்றில் ஏதேனும் குறைபாடுகளைக் கண்டறிந்தால், ஆசிரியர் வகுப்பில் கற்பித்தலை நிறைவு செய்தபின் தனிப்பட்ட முறையில் ஆசிரியர் மற்றும் தலைமையாசிரியருடன் கலந்துரையாட வேண்டும்.

## பள்ளித் தத்தெடுப்பின் விளைவுகள்

- கட்டடம், வகுப்பறை, நூலகம், ஆய்வகம், போன்றவைகளின் பயன்பாடு அதிகரிக்கும்.
- புதுமையானக் கற்பித்தல் நிகழ்வுகள் நடைபெறும்.
- மாணவர்களின் இடைநிற்றல் குறைந்து, சேர்க்கை அதிகரிக்கும்.
- மாணவர்களின் கற்றல் அடைவு அதிகரிக்கும்.
- ஆசிரியர்களின் திறன் மேம்படும்.
- பாடம் சார்ந்த, பாடம் சாராத செயல்பாடுகளில் மாணவர்களின் பங்கேற்பு அதிகரிக்கும்.

- பள்ளிக்கும், சமூகத்திற்கும் நெருக்கம் உருவாகும்.
- ஆசிரியர்கள், மாணவர்களிடையே தலைமைத்துவம் அதிகரிக்கும்.
- மற்ற பள்ளிகளுக்கு தத்தெடுக்கப்பட்ட பள்ளி தத்தெடுக்கப்பட்டப் பள்ளி முன்மாதிரிப் பள்ளியாக விளங்கும்.

## அறிக்கைத் தயாரித்தல்

வகுப்பறை கற்பித்தலில் ஆசிரியர் சிறப்பாகச் செயல்படுத்திய செயல்பாடுகள் அல்லது புதிய உத்திகளைக் குறிப்பெடுத்து பாடவாரியாக தொகுத்து, அதனை அறிக்கையாகத் தயாரிக்க வேண்டும்.

மேலும் வகுப்பறை உற்றுநோக்கலின்போது ஆசிரியருக்கு கற்பிக்கும் போது இடர்பாடு ஏற்பட்டால் அப்பகுதிகளை குறிப்பெடுத்து பாடவாரியாக தொகுத்து தனி அறிக்கை தயாரிக்க வேண்டும். மேற்கூறிய இரண்டு அறிக்கைகளையும் நிறுவன முதல்வரிடம் அடுத்த நாள் ஒப்படைக்க வேண்டும்.

அனைத்து கல்வியாளர்களின் அறிக்கைகளைத் தொகுத்து, துரிதமாக மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு அனுப்ப மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் நடவடிக்கை மேற்கொள்வர்.

## இறுதியாக…

பள்ளித் தத்தெடுத்தல் என்பது, பள்ளிகளை வளர்ச்சியடையச் செய்யும் ஒரு கருவி ஆகும். இத்திட்டத்தில் பலர் ஒன்றிணைந்து செயல்படுவதால், புதிய உத்திகள், புதிய அணுகுமுறைகள், கலந்துரையாடல்களில் பெறும் அனுபவங்கள், பள்ளிக்கு வெளியே இருப்பவர்களின் பங்களிப்பு, தத்தெடுத்தவரின் அனுபவப் பகிர்வு போன்றவைகளால் பள்ளி புதிய எழுச்சி பெறும் என்பதில் ஐயமில்லை.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின்

செயல்முறைகள், சென்னை-06

ந.க.எண்.898560/எஃப்-3/2024 நாள். 18.10.2024

பொருள்: மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் – பள்ளிக்கல்வித் துறையின் கீழ் இயங்கும் மாவட்டங்களில் உள்ள பள்ளிகளில் சில பள்ளிகளை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் சார்ந்த மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மூலம் தெரிவு செய்து தத்தெடுத்தல் (Adoption) – மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் மற்றும் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கு அறிவுரை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: 14.10.2024 அன்று நடைபெற்ற பள்ளிக் கல்விச் செயலர் அவர்களின் கலந்துரையாடல் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள்.

-----

பள்ளிக் கல்வித்துறை செயலர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அனைத்து மாவட்டங்களிலுள்ள பள்ளிக்கல்வித் துறையின் கீழ் இயங்கும் அரசுப் பள்ளிகளில் சில பள்ளிகளை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள், முதுநிலை விரிவுரையாளர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் தத்தெடுத்து அப்பள்ளிகளை வளப்படுத்தவும் ஆசிரியர்களின் பணித்திறனை மேம்படுத்தவும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள், முதுநிலை விரிவுரையாளர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் ஒவ்வொருவரும் சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருடன் கலந்தாலோசித்து தங்கள் மாவட்டத்திலுள்ள இரண்டு பள்ளிகளைத் தெரிவு செய்து, தத்தெடுக்க (Adoption) வேண்டும். அவ்வாறு தத்தெடுத்த பள்ளிகளின் விவரங்களை இணைப்பு 1 இல் தெரிவித்துள்ளவாறு ஒரு பட்டியலினைத் தயாரித்து இவ்வியக்ககத்திற்கு 25.10.2024-க்குள் tnscertjd3@gmail.com இணை இயக்குநர் (பயிற்சி) அவர்களது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்க அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு தத்தெடுத்த பள்ளிகள் ஒவ்வொன்றையும் மாதம் இரு முறை பார்வையிட வேண்டும். அவ்வாறு பார்வையிடும் போது பள்ளி வளாகத் தூய்மை சார்பாகத் தேவையான வழிகாட்டுதல்களைப் பள்ளித் தலைமையாசிரியருக்கு வழங்க வேண்டும்.

பள்ளி வகுப்பறை கற்பித்தலைப் பார்வையிடும்போது, ஆசிரியர் மாணவர்களிடையிலான அணுகுமுறை, கற்பித்தல் கருவிகளைப் பயன்படுத்தும் விதம், பாடப்பொருளை துணைக் கருவிகளுடன் விளக்குதல், மாணவர் செயல்பாடுகள், ஆசிரியர் மாணவர்களிடம் வினாக் கேட்டு விடையறிதல் போன்ற வகுப்பறைச் செயல்பாடுகளை உற்று நோக்க வேண்டும். மேற்கண்டவற்றில் ஏதேனும் குறைபாடுகளை கண்டறிந்தால், ஆசிரியர் வகுப்பு கற்பித்தலை நிறைவு செய்தபின் தனிப்பட்ட முறையில் ஆசிரியர் மற்றும் தலைமையாசிரியருடன் கலந்துரையாட வேண்டும்.

வகுப்பறை கற்பித்தலில் ஆசிரியர் சிறப்பாகச் செயல்படுத்திய செயல்பாடுகள் அல்லது புதிய உத்திகளை குறிப்பெடுத்து பாடவாரியாக தொகுத்து, அதனை அறிக்கையாகத் தயாரிக்க வேண்டும்.

மேலும் வகுப்பறை உற்றுநோக்கலின் போது ஆசிரியருக்கு கற்பிக்கும் போது இடர்பாடு ஏற்பட்டால் அப்பகுதிகளை குறிப்பெடுத்து பாடவாரியாக தொகுத்து தனி அறிக்கை தயாரிக்க வேண்டும். மேற்கூறிய இரண்டு அறிக்கைகளையும் நிறுவன முதல்வரிடம் மறு நாளே ஒப்படைக்க வேண்டும்.

அனைத்து கல்வியாளர்களின் அறிக்கைகளை தொகுத்து, துரிதமாக இவ்வியக்ககத்திற்கு அனுப்ப அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களும் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பள்ளிப் பார்வைக்குச் செல்லும் நிறுவன முதுநிலை விரிவுரையாளர், விரிவுரையாளர்களுக்கு பயணப்படியாக நாள் ஒன்றுக்கு ரூ.200/- வீதம் வழங்கிடவும், இந்நிதியினை தங்களது நிறுவன திட்டம் மற்றும் செயல்பாடுகள் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

இயக்குநர்

பெறுநர்

1. அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள்
2. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

நகல்

அரசு செயலாளர், பள்ளிக் கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை-09 (தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)

## இணைப்பு – 1

## பள்ளித் தத்தெடுப்பு படிவம்

மாவட்டம் :

| வ. எண். | மாவட்டம் | ஒன்றியம் | முதல்வர்/ முதுநிலை விரிவுரையாளர்/ விரிவுரையாளர் பெயர் | பதவி | தத்தெடுத்த பள்ளியின் பெயர் மற்றும் முகவரி | பள்ளி நிலை தொடக்கப்பள்ளி /உயர் தொடக்கப்பள்ளி / உயர்நிலைப் பள்ளி/ மேல்நிலைப் பள்ளி | தலைமையாசிரியர் பெயர் | தொலைபேசி எண் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

இயக்குநர்

# பள்ளிகளைத் தத்தெடுத்தல் – செயல்பாடுகள்

தத்தெடுத்தவரின் பெயர் :

மாதம்:

பள்ளி 1 :

| வ. எண் | நாள் | | செயல்பாடுகள் | |
|---|---|---|---|---|
| 1 | | | 1 | |
| | | | 2 | |
| | | | 3 | |
| | | | 4 | |
| | | | 5 | |
| 2 | | | 1 | |
| | | | 2 | |
| | | | 3 | |
| | | | 4 | |
| | | | 5 | |
| பள்ளி 2 : | | | | |
| 1 | | | 1 | |
| | | | 2 | |
| | | | 3 | |
| | | | 4 | |
| | | | 5 | |
| 2 | | | 1 | |
| | | | 2 | |
| | | | 3 | |
| | | | 4 | |
| | | | 5 | |